முருகப்பெருமான் துணை

**மகான் கழற்சிங்க நாயனார் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

26.04.2021, திங்கட்கிழமை

1. தவசியாக அருளும் அரங்கனே
தரணியில் சன்மார்க்கம் விதைத்து
அவனியோர் ஞானவழிக்கு வர
அவதாரம் புரிந்தநல் அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் பிலவ தகர் திங்கள்
வரங்களென முன்னான்கோர் திகதி சோமவாரம்
(பிலவ வருடம் சித்திரை மாதம் 13ம் நாள், 26.04.2021 திங்கட்கிழமை)
வழங்குவேன் யோகபிரசன்ன ஆசி
3. ஆசியை கழற்சிங்க நாயனார் யானும்
அறிவிப்பேன் உலக நலம் பெற
ஆசி தந்து உலக மக்களுக்கு
அழியாமை தரும் குருவாக வந்த
4. வந்தநல் ஞானியர் காட்டும்
வல்லமையான தரும பலம்தன்னை
சிந்தைவைத்து உலக மக்கள்
செப்பிடுவேன் ஏற்றுத் தொடர்ந்துவர
5. வருகவே மக்களின் சக்தி
வையகம் எங்கும் தரும சக்தியாகி
பெருமைமிக்க ஆற்றலாகி
பேருலகமே மாற்றம் காணும்
6. காணவே ஞானிகளை வணங்கி
கருணைமிக்க அரங்கமகானின்
ஞானத்தலைமையை ஏற்றுமே
நம்பிக்கை வைத்து வருக
7. வருகவே ஞானிகள் வெளிப்பாடு
வையகம் எங்கும் மிகுந்து
முருகப் பெருமான் அருளாசியும்
முழுமையான தயவும் கிட்டியே
8. கிட்டியே வையகம் தானும்
குறைவிலா நீர் நிலவளமுடன்
கட்டமில்லா வளர்ச்சிநிலைகளும்
கட்டுப்பாடான சமூக ஏற்றமும்
9. ஏற்றமும் மாற்றமும் சமத்துவமும்
எங்கும் ஞானத் தலைமையுமாக
ஆற்றல் பெருகி இனிதே
அகிலமே ஆறுமுகன் ஞான ஆட்சி

10. ஆட்சி கண்டுமே சிறக்கும்
அனைவருக்கும் தேவைகள் பூர்த்திபட
ஆட்சி மக்களை காக்கின்ற
அழிவில்லா சக்திநிலை காண்கும்

11. காண்கவே கலித்துன்பம் போக்கும்
கந்தமகா சூட்சுமமான அரங்கன்
உண்மைவழியில் உலகம் வர
உலகமாற்றம் இனிதே நடந்தேறும்
யோகபிரசன்ன ஆசி முற்றே

–சுபம்–